**செய்தி வெளியீடு எண் : 2176** **நாள் : 01.12.2022**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகமும், பிரான்ஸ் நாட்டின் டசால்ட் சிஸ்டம்ஸ் நிறுவனமும் உருவாக்கியுள்ள தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்திக்கான திறன்மிகு மையம் (TANCAM) சிறு குறு தொழில் நிறுவனங்களின் மேம்பட்ட உற்பத்திக்கான உயர் தொழில்நுட்பத்தை வழங்குவதற்காக தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. மேலும், TANCAM மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் உயர் தொழில்நுட்பத்தை பயிற்றுவிக்கவும் மற்றும் அவர்களின் திறனை மேம்படுத்தவும் இந்த நிறுவனம் உதவுகிறது. தமிழ் நாடு முதலமைச்சரின் கனவுத்திட்டமான "நான் முதல்வன்" திட்டத்திலும் இந்நிறுவனம் முக்கிய பங்களிப்பைச் செய்து வருகிறது.

இன்று (1.11.2022) 20 க்கும் மேற்பட்ட சிறு குறு தொழில் நிறுவனங்களும் அரசு கவின் கலைக்கல்லூரி மற்றும் அரசு கட்டிடக்கலை மற்றும் சிற்பக் கல்லூரி பேராசிரியர்களும் கலந்துகொண்ட கருத்தரங்கு மற்றும் முப்பரிமாண (3D) வடிவமைப்பு பற்றிய முழுமையான அறிமுகமும் ,விளக்கங்களும் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாகவும், தொழில் மேம்பட வழிகாட்டும் வகையில் இருந்ததாகவும், தமிழக அரசின் இந்த முயற்சிக்கு பாராட்டுகளையும் நன்றியையும் பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியை தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்திக்கான திறன்மிகு மையம் (TANCAM) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திரு.பி.கிருஷ்ணமூர்த்தி, கலை பண்பாட்டு துறை இயக்குனர் திரு எஸ்.ஆர் காந்தி மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in